World Tamil ChristianFellowship
**60, High Worple, Rayners Lane, Harrow**
Middlesex, HA2 9SZ, United Kingdom
Tel: +44 208 429 9292
www.wcflondon.com
wcflondon@gmail.com

# எபேசியர்

1. உங்களது அடையாளம் (c) ஆசீர்வாதம் (1)

அரேபியன் இரவுகள் என்ற கதையில் இருந்த அலடீனைப் போல, நீங்கள் விரும்பியதைக் கேட்கலாமென நான் உங்களுக்கு ஒரு மந்திர விளக்கை கொடுத்தால் நீங்கள் என்ன செய்வீர்கள்?

சற்று சிந்தித்துப் பாருங்கள்!

ஆசீர்வாதங்கள்

ஆசீர்வாதம் என்ற வார்த்தையானது வேதாகமத்தில் 400 தடவைகளுக்கு மேலாக இருக்கிறது. எபிரேய மொழியிலே 'barak' பாராக், 'ashar' ஆஷார் என்றும், கிரேக்க மொழியிலே 'makarios' மகாரியஸ், 'eulogeo' இலொஜியோ என்றும் சொல்லப்பட்டிருப்பதோடு இதன் அர்த்தமானது, அதிகமான தயை, பேரின்பம் என்றும் (Merriam-Webster's Collegiate) மெரியம் - வலையமைப்பு கல்லூரியைச் சார்ந்த அகராதியில் ''ஆசீர்வதிக்கும் நபருடைய வார்த்தைகள் அல்லது கிரியை'' அல்லது ''சந்தோஷிப்பதற்கு முன்னேற்றத்திற்கு உதவுகிற காரியம்'' என்று அர்த்தப்படுகிறது. எபிரேய மொழியிலும், கிரேக்க மொழியிலும் ஆசீர்வாதமென்று அர்த்தப்படக்கூடிய வேறு சில சொற்களும் உண்டு.

ஆனால் பரம்பரைச் சொத்தாக உரிமையாக்கிக்கொள்ளும் ஆசீர்வாதத்தைப்பற்றி பவுலானவர் இங்கு குறிப்பிடவில்லை; நீங்கள் ஏற்கனவே ஆசீர்வதிக்கப்பட்டுள்ளீர்களென்பதையே அர்த்தப்படுத்துகின்றார்.

ஆசீர்வாதங்கள் - பழைய புதிய ஏற்பாடுகளுக்கிடையிலான வித்தியாசத்தை ஒப்பிடுதல்.

பழைய ஏற்பாட்டில் ஆசீர்வாதங்கள் பூமிக்குரியவைகளாகவும் உங்கள் கீழ்ப்படிதலை ஆதாரமாகக் கொண்டதாகவும் இருக்கிறது. நீங்கள் தேவனுக்கும் அவருடைய கட்டளைகளுக்கும் கீழ்ப்படிந்தால், நீங்கள் பௌதீக ரீதியாக ஆசீர்வதிக்கப்படுவதோடு அதற்கான பிரதிபலனாக செழிப்பும் கிடைக்கிறது. அதேநேரத்தில் நீங்கள் தேவனுக்கும் அவருடைய கட்டளைகளுக்கும் கீழ்ப்படியாவிடில், நீங்கள் பௌதீக

ரீதியாக துன்பப்படுவதோடு வறுமையினால் பீடிக்கப்பட்ட வாழ்க்கையை வாழ்வீர்கள்.

உபாகமம் 28வது அதிகாரமானது, இதன் முதல் 14 வசனங்களை மாத்திரம் வாசித்துவிட்டு, மிகுதியை புறக்கணிக்கும் சில கிறிஸ்தவர்கள், நன்றாய் அறிந்திருக்கும் வேதாகம பகுதியாகும்.

வசனங்கள் 1-2:

> *‘‘இன்று நான் உனக்கு விதிக்கிற உன் தேவனாகிய கர்த்தருடைய கட்டளைகளின்படியெல்லாம் செய்ய நீ கவனமாயிருக்கும்படிக்கு, அவர் சத்தத்திற்கு உண்மையாய்ச் செவிகொடுப்பாயானால். உன் தேவனாகிய கர்த்தர் பூமியிலுள்ள சகல ஜாதிகளிலும் உன்னை மேன்மையாக வைப்பார். நீ உன் தேவனாகிய கர்த்தரின் சத்தத்துக்கச் செவிகொடுக்கும்போது, இப்பொழுது சொல்லப்படும் ஆசீர்வாதங்களெல்லாம் உன்மேல் வந்து உனக்குப்பலிக்கும்’’*

ஆகவே, நீங்கள் அவருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படிவீர்களானால், அப்பொழுது நீங்கள் அந்த ஆசீர்வாதங்களையெல்லாம் சுதந்தரித்துக்கொள்ள முடியும். நீங்கள் அவற்றை அறிந்திருப்பீர்களென நான் நம்புகிறேன். நீங்கள் உங்கள் வாழ்க்கையில் சில சந்தர்ப்பங்களில் அந்த ஆசீர்வாதங்களை பற்றி பேசியிருப்பீர்கள்.

உங்கள் மீது சாபம் வருவதற்கான காரியங்களை 15 வசனத்திலிருந்து அவதானிப்போம்.

> *‘‘இன்று நான் உனக்கு விதிக்கிற உன் தேவனாகிய கர்த்தருடைய எல்லாக் கற்பனைகளின்படியும் கட்டளைகளின்படியும் நடக்கக் கவனமாயிருக்கிறதற்கு, அவர் சத்தத்திற்குச் செவிகொடாதே போவாயாகில், இப்பொழுது சொல்லப்படும் சாபங்களெல்லாம் உன்மேல் வந்து, உனக்குப் பலிக்கும்.’’* உபாகமம் 28:15

அடுத்து வருகிறதான 53 வசனங்களும் எமது கீழ்ப்படியாமையினாலே வருகிறதான சாபங்களைப் பற்றி விபரிக்கின்றது.

1. நீ பட்டணத்திலும் சபிக்கப்பட்டிருப்பாய் - உபாகமம் 28:16
2. நீ வெளியிலும் சபிக்கப்பட்டிருப்பாய்
3. உன் கூடையும், மாப்பிசைகிற உன் தொட்டியும் சபிக்கப்பட்டிருக்கும் - வசனம் 17
4. உன் கர்ப்பத்தின் கனி (பிள்ளைகள்) சபிக்கப்பட்டிருக்கும் - வசனம் -18

5. உன் நிலத்தின் கனி சபிக்கப்பட்டிருக்கும்.
6. உன் மாடுகளின் பெருக்கம் சபிக்கப்பட்டிருக்கும்.
7. உன் ஆடுகளின் மந்தைகளும் சபிக்கப்பட்டிருக்கும்.
8. நீ வருகையில் சபிக்கப்பட்டிருப்பாய் - வசனம் 19
9. நீ போகையில் சபிக்கப்பட்டிருப்பாய்
10. கர்த்தர் உனக்குச் சாபத்தை வரப்பண்ணுவார் - வசனம் 20
11. கர்த்தர் உனக்குச் சஞ்சலத்தை வரப்பண்ணுவார்
12. கர்த்தர் உனக்கு கேட்டையும் வரப்பண்ணுவார்
13. நீ கையிட்டுச் செய்கிறதெல்லாவற்றிலும் தோல்வியடைவாய்
14. நீ அழிந்து போவாய்
15. நீ சீக்கிரத்தில் கெட்டுப்போவாய்
16. நீ நிர்மூலமாவாய் (மரணத்தை கொண்டு வரும் சிலகாரியங்கள்) - வசனம் 21
17. கொள்ளை நோய் உன்னை பிடித்துக்கொள்ளும்
18. அழிவு – வசனம் 22
19. காய்ச்சல் (உஷ்ணமான காய்ச்சல், உடலில் வீக்கத்துடனான எரிவு, இது புற்றுநோய் மற்றும் அல்சர் வியாதிகளை குறிப்பிடுகின்றது.)
20. உஷ்ணமான காய்ச்சல் - (இது உடலில் வீக்கத்துடனான எரிவை மாத்திரமல்ல, எவ்வித உதவியும் இல்லாததினால் ஏற்படுகின்ற, மனதின் பொறுக்கமுடியாத வேதனையையும் ஆத்துமாவின் கடுமையான வேதனையையும் குறிக்கிறது) - வசனம் 22
21. வாள் அல்லது படைவலிமை - (யுத்தம், சமூகத்தின் சண்டைகள்) - வசனம் 22
22. எரிபந்தத்தினால் (உடலில் வீக்கத்துடனான எரிவு) – வசனம் 22
23. திடீர் அழிவு (இது தாவரங்களை அழிவடையச் செய்யும் ஒருவகை நோயையும், அறுவடையை அழிவடையச் செய்வதையும், மனிதர்களையும் மிருகங்களையும் மூச்சுத்திணரவைத்து அழிவடையச் செய்வதையும் குறிக்கிறது. – வசனம் 22
24. வறட்சி (பயத்திலிருந்து ஒரு நபருடைய எல்லையை அல்லது தாவரங்களின் வறட்சியை அர்த்தப்படுகிறது) வசனம் 22
25. வானம் வெண்கலமாகவும் (மழையில்லாமல் கனிகொடாத காலப்பகுதி போல் பதில் கிடைக்காத ஜெபங்கள்)
26. பூமி இரும்பாய் இருக்கிறது (அறுவடையின் தோல்வி) – வசனம் 24
27. வறட்சியின் காரணமாக மழையில்லாதிருத்தல் (மழையில்லாதிருப்பதை சொல்லக்கூடிய வழி)
28. அழிவுக்கு காரணமான நீண்ட கால வறட்சி
29. சத்துருக்களுக்கு முன்பாக முறியடிக்கப்படல் - வசனம் 25
30. ஒரு வழியாய் அவர்களுக்கு எதிராகப் புறப்பட்டு, ஏழு வழியாய் அவர்களுக்கு முன்பாக ஓடிப்போவாய் - வசனம் 25
31. பூமியிலுள்ள எல்லா ராஜ்யங்களிலும் சிதறுண்டுபோவாய் - வசனம் 25

32. உன் பிணம் ஆகாயத்துப் பறவைகளுக்கும், பூமியின் மிருகங்களுக்கும் இரையாகும்.
33. எதிரிகளை விரட்டுவதற்கு உதவி இல்லாதிருக்கும்.
34. எகிப்தின் எரிபந்தமான பருக்களினாலும் (உடலில் வீக்கத்துடனான எரிவு, எரிபந்தமான பருக்கள், அல்சர், கட்டிகள்) வசனம் - 27,35
35. மூலவியாதியினால் (இவைகள் இரத்தம் கசியும் நோயாகும்) – வசனம் 27
36. சிரங்கு ( சொறிவு ஏற்படுகிறதான சிரங்கு - வசனம் 27
37. சொறியினால் (காயமான இடத்தில் சொறிவை ஏற்படுத்துகிறதான) – வசனம் 27
38. நீ குணமாகமாட்டாய் (குணமாக முடியாதிருத்தல்)
39. புத்தி மயக்கத்தினாலும் (வேடிக்கையான, முட்டாள்தனமான. நீங்கள் மனந்திரும்பினாலும் என்ன செய்ய வேண்டுமென அறியாதிருத்தல்) - வசனம் 28
40. குருட்டாட்டம் (சரீர ரீதியாக, மனதின் மேலும் ஆவிக்குரிய) – வசனம் 28
41. புத்திமயக்கத்தினால் (மதி மயங்கியிருத்தல், ஆச்சரியப்படுதல் - வசனம் 28
42. பட்டப்பகலிலே தடவிக்கொண்டு இருத்தல்.
43. ஒன்றும் வாய்க்காதே போகும்.
44. எந்நாளும் ஒடுக்கப்படுகிறவனாயும், பறிகொடுக்கிறவனுமாயிருப்பாய்.
45. ஒருவனும் உனக்கு உதவிசெய்யாதிருப்பார்கள்.
46. பெண்ணை உனக்கென நியமிப்பாய். எதிரி அவளை சிறையெடுத்துக்கொள்வான். – வசனம் 30
47. வீட்டைக் கட்டுவாய். எதிரி தனக்கென அதனை எடுத்துக்கொள்வான்.
48. திராட்சைத் தோட்டத்தை நாட்டுவாய் அதன் பலனை அனுபவிக்க மாட்டாய்
49. உன் மாடுகள் உன் கண்களுக்கு முன்பாக அடிக்கப்படும். நீ அதில் ஒனறும் புசிப்பதில்லை. – வசனம் 31
50. புதுப்பித்தல் இல்லை
51. உங்களை விடுதலையாக்க ஒருவரும் இல்லாதிருப்பர்.
52. உங்கள் குமாரரும் குமாரத்திகளும் அந்நிய ஜனங்களுக்கு அடிமைகளாகக் கொடுக்கப்படுவார்கள். – வசனம் 32
53. அவர்களுடைய விடுதலைக்காக நீண்டகாலம் காத்திருந்து உங்கள் பிள்ளைகளுக்கு அது கிடையாதிருக்கும்.
54. உன் கையில் பெலனில்லாதிருக்கும்
55. எதிரிகள் உன் அறுவடையை சாப்பிடுவார்கள் - வசனம் 33
56. நீ சகல நாளும் ஒடுக்கப்பட்டும், நொறுக்கப்பட்டும் இருப்பாய்.
57. உன் கண்கள் காணும் காரியங்களினாலே மதிமயங்கிப் போவாய்.
58. மரமும் கல்லுமான அந்நிய தேவர்களைச் சேவிப்பாய்

59. உன் குமாரரும் குமாரத்திகளும் உன்னோடேகூட இரார்கள். அவர்கள் சிறைபட்டுப்போவார்கள். வசனம் 41
60. உன் நடுவிலிருக்கிற அந்நியன் உனக்கு மேற்பட்டு உயர்ந்திருப்பான். நீ மிகவும் தாழ்த்தப்பட்டுப் போவாய். – வசனம் 43
61. அந்நியனிடத்தில் நீ கடன்படுவாய் வசனம் 44
62. உன் சத்துருக்களை சேவிப்பாய் - வசனம் 48
63. எல்லாச் சொத்துக்களும் சூறையாடப்படும்.
64. நிர்வாணத்தோடு இருப்பாய்
65. எல்லாம் குறைவுபட்டுப்போகும்.
66. இருப்பு நுகத்தடி உனக்க போடப்படும்
67. வாழ்க்கையின் அழிவு – வசனங்கள் 48-51
68. அந்நிய தேசங்களோடு யுத்தம் - வசனம் 49
69. எதிரிகள் இரக்கமற்ற கிரியைகளை உனக்கு காண்பிப்பார்கள் - வசனம் 50
70. மனித மாம்சத்தை உண்பாய் வசனம் 53-57
71. பஞ்சமும், கிலேசமும் - வசனம் 53-57
72. ஆண்கள் நெருங்கிய உறவுகளை கொலைசெய்வார்கள் - சகோதரர்கள், மனைவி, பிள்ளைகள்
73. பெண்கள் நெருங்கிய உறவுகளை கொலைசெய்வார்கள் - கணவன், மகன்கள், மகள்கள், குழந்தைகள் - வசனங்கள் 56-57
74. நீங்காத பெரிய வாதைகள் - வசனங்கள் 58-59
75. கொடிய ரோகங்கள் - வசனம் 59 எகிப்தியரின் வியாதிகளெல்லாம் உன்மேல் வருவிப்பார் - வசனம் 60
76. அந்நிய தேவர்களுக்கு பணிவிடை செய்வாய்
77. சமாதானமின்மை
78. இளைப்பாறுதல் அற்றதன்மை, பயப்படுகிற குழப்பமுள்ள இருதயம்
79. பார்வைகுறைபாடு
80. மனதின் துயரம்
81. இரவும் பகலும் பயம் ஆளுகை செய்தல்
82. வாழ்க்கைக்கான பாதுகாப்பு இல்லாதிருத்தல்
83. வாழ்க்கையின் தொடர்ந்தேர்ச்சியான ஆபத்துக்களுக்கு பயப்படுதலும் துயரப்படுதலும் - வசனம் 67
84. எகிப்திலிருந்ததைப் போல அடிமைப்பட்டுப்போவாய் - வசனம் 68
85. நேர்த்தியான நற்குணமுள்ளவளான பெண் இழிவான அநாகரிகமானவளாக மாறி அவள் தன் கணவனையும், மகன்களையும், மகள்களையும், குழந்தைகளையும் கொலை செய்வாள்.

என்ன ஆச்சரியம்! நீங்கள் எப்போதாவது இந்த சாபங்களை கண்டிருக்கிறீர்களா? இவைகளை நான் விபரமாக சொல்லியிருப்பதற்கான காரணம், அநேகர் இன்றும் பழைய ஏற்பாட்டிலிருந்து வாக்குத்தத்தங்களை மாத்திரம் எடுத்துவிட்டு கீழ்ப்படியாமையின் தண்டனையை உணராதிருக்கிறார்கள்.

புதிய ஏற்பாட்டில், எமது ஆசீர்வாதங்கள், உலகத்துக்குரியவைகளாய் மாத்திரமல்ல, பரலோகத்துக் குரியவைகளாகவும், நித்தியமானவைகளாகவும் இருக்கிறது. தேவனுடைய ஆசீர்வாதங்கள் ஆவிக்குரியவைகளாகவும், நித்தியமானவைகளாகவும், பரலோகத்திற்குரியவைகளாகவும் இருப்பதோடு அவைகள் வெளிப்புறமான செழிப்பை அர்த்தப்படுத்தவில்லை.

மிகப்பெரிதான வித்தியாசம் என்னவெனில், எப்போது எங்கே நாம் ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்கிறோம் என்பதாகும்.

பழைய ஏற்பாட்டில் வாழ்க்கையானது இங்கே பூமியில் இருப்பதைக் குறித்து சொல்லப்படுகிறது (இஸ்ரவேல் தேசத்திலிருப்பது போன்று) ஆனால் புதிய ஏற்பாட்டில் இங்கே இருப்பதல்ல, இவ்வாழ்க்கைக்குப் பிறகு பரலோகில் இருப்பதைக் குறித்ததாகும்.

ஆகவே நான் பூமியில் இருக்கும்போது எனக்கு என்ன நடைபெறுகிறது? எப்படி நான் வாழ்க்கையை நினைத்துக்கொள்வது?
தேவன் நம்முடைய எல்லாத் தேவைகளையும் சந்திப்பதாகவும், அவர் நமக்கு அவைகளை தருவதாகவும் வாக்குப்பண்ணியிருக்கிறார். மத்தேயு 6:19-34, சொல்லியிருப்பதைப் போல நாம் எதை உடுத்துவோம்? நாம் தேவனை முதலாவது தேடுவோமானால் எதை உண்போம்? எதை உடுத்துவோம்? எங்கே வாழ்வோம்? என கவலைப்படத் தேவையில்லை. அவரே நமக்கு எல்லாவற்றையும் தருகிறார்.

> ''*முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள்: அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக்கொடுக்கப்படும்.*'' மத்தேயு 6:33

> ''*என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார்.*'' பிலிப்பியர் 4:19

எனவே, இந்த பூமிக்குரிய உங்கள் தேவைகள் அனைத்தும் தேவனால் சந்திக்கப்படும். ஆனால் தேவன் சிலருக்கு அதிகமான பணத்தையும், செல்வாக்கையும் ஒப்படைத்திருப்பது ஏன்?

நிர்வாகத்தன்மை! ஆம் இதற்கு பின்னணியில் இருக்கும் காரணத்தை நீங்கள் புரிந்து கொள்வீர்களானால், அதன்பின் அது ஆசீர்வாதம் அல்ல, மிகப்பெரிய சுமை என்பதை புரிந்துகொள்வீர்கள். அது தேவனுடைய நாமத்தின் மகிமைக்காக பயன்படுத்தப்படுகிறதா என்பதை நிர்வகிப்பது மிகப்பெரிய சுமை என்பதை புரிந்துகொள்வீர்கள்.

*‘‘அறியாதவனாயிருந்து, அடிகளுக்கு ஏதுவானவைகளைச் செய்தவனோ சில அடிகள் அடிக்கப்படுவான். எவனிடத்தில் <u>அதிகங் கொடுக்கப்படுகிறதோ</u> அவனிடத்தில் <u>அதிகங் கேட்கப்படும்.</u> மனுஷர் எவனிடத்தில் <u>அதிகமாய் ஒப்புவிக்கிறார்களோ</u> அவனிடத்தில் <u>அதிகமாய்க் கேட்பார்கள்.</u>’’* லூக்கா 12:48

இயேசு செல்வந்தரா? அல்லது ஏழையா?

நீங்கள் என்ன சொல்வீர்கள், அவர் செல்வந்தரா? அல்லது ஏழையா?

அவருடைய பூமிக்குரிய பெற்றோர்கள் செல்வந்தரா? அவர் எந்த நன்மையும் வராதிருந்த இடமாகிய நாசரேத்து என்னும் ஊரில் பிறந்தவர். இயேசுவுக்கு தலைசாய்க்கவும் இடமில்லாதிருந்ததென வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அவருடைய பெற்றோர் தச்சுத்தொழில் செய்தவர்கள்; ஆகவே அவர்கள் செல்வந்தர்கள் அல்ல. அவர்களால் இயேசுவை அடக்கம்பண்ணுவதற்கு ஒரு கல்லறை கூட இல்லாதிருந்தது. செல்வந்த மனிதனான யோசேப்பு எனப்பட்ட ஒருவர் அவருடைய கல்லறையை இயேசுவை அடக்கம் செய்வதற்காக கொடுத்தார்.

எனவே இயேசு ஏழையாகவே வளர்ந்தார்.

கேள்வி என்னவெனில் அவர் செல்வந்தரா அல்லது ஏழையா? என்பதல்ல: அவர் தெய்வபக்தியுள்ளவரா? அற்றவரா? என்பதேயாகும்.

கிறிஸ்தவர்களாக நாம், தேவபக்தியுள்ளவர்களா, தேவபக்தியற்றவர்களா அல்லது நாம் செல்வந்தரா, ஏழையா என நம்மை நாமே கேட்கவேண்டும்.

யாக்கோபு 1:1-9 இல் நான்கு விதமானவர்களை பற்றி விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

1. தேவபக்தியுள்ள ஏழைகள்
2. தேவபக்தியுள்ள செல்வந்தர்கள்
3. தேவபக்தியற்ற ஏழைகள்
4. தேவபக்தியற்ற செல்வந்தர்கள்

இந்த பாடத்தை புரிந்து கொள்வதற்காக நாம் அவர்களைப் பற்றி விபரமாகப் பார்ப்போம்.

1. தேவபக்தியுள்ள ஏழைகள்

இயேசுவில் ஆரம்பித்து தச்சர்களாகிய அவருடைய பூமிக்குரிய குடும்பத்தினர் மற்றும் தங்களுடைய காரியங்களுக்காக போராடியவர்கள்

அநேகரை நாம் வேதாகமத்தில் காணலாம். மாற்கு 12:41-44இல் ஏழை விதவையானவள் தன்னிடமிருந்து ஒரு காசை அர்ப்பணிப்புடன் கொடுத்ததைப் பற்றி சொல்லப்பட்டிருக்கின்றது. மாற்கு 14:7 இல் இயேசு இப்பூமியில் ஏழைகள் எப்போதும் இருக்கிறார்கள் என்று சொல்கிறார்.

2. தேவபக்தியுள்ள செல்வந்தர்கள்

நாம் வேதாகமத்திலுள்ள ஆபிரகாம், யோசேப்பு, நெகேமியா போன்ற அநேக செல்வந்தர்களை நினைத்துப் பார்க்கிறோம். நான் யோபுவை எப்படி மறக்கலாம்? மிகவும் செல்வந்தனான மனிதன். அரிமத்தேயாவைச் சேர்ந்த யோசேப்பு (லூக்கா 23:50-51) என்பவர் இயேசுவுக்கு தன் கல்லறையை கொடுத்தவர். இன்னும் சில மற்றவர்களும் தேவபக்தியுள்ளவர்களும் செல்வந்தர்களுமாய் இருந்திருக்கிறார்கள்.

3. தேவபக்தியற்ற ஏழைகள்

தேவபக்தியற்ற ஏழைகள் சிலரைப்பற்றியும் வேதாகமம் சுட்டிக்காட்டுகிறது. நீதிமொழிகள் முழு புத்தகமும் அவர்களைப் பற்றிச் சொல்கிறது. சோம்பேறியான, வேலை செய்ய விருப்பமில்லாத, சீக்கிரத்தில் செல்வந்தராக விரும்புகிறவர்கள்.

4. தேவபக்தியற்ற செல்வந்தர்கள்

பார்வோன், ஏரோது, நேபுகாத்நேச்சார் போன்ற அநேக அரசியல்வாதிகள் தேவபக்தியற்றவர்களும் செல்வந்தர்களுமாய் இருந்திருக்கிறார்கள். அவர்கள் மிகுந்த பலம் வாய்ந்தவர்களாகவும், செல்வந்தர்களாகவும் தேவபக்தியற்றவர்களுமாய் இருந்தார்கள்.

ஐசுவரியவானான தலைவன் ஒரு நல்ல உதாரணம் (லூக்கா 18:18-23) இவர் இயேசுவிடம் வந்து நித்திய ஜீவனைச் சுதந்தரித்துக்கொள்வதற்கு நான் என்ன செய்யவேண்டும்? என்று கேட்ட போது இயேசு அவருக்கு பதிலளித்து ‘‘நீ என்னையும் உன்னுடைய பணத்தையும் நேசிக்கமுடியாது. இவ்விரண்டில் ஒன்றை நீ தெரிவு செய்ய வேண்டும்’’ என்கிறார். அவன் வருத்தமடைந்து இயேசுவை விட்டு திரும்பிப் போனானென்று வேதாகமம் சொல்கிறது. ஏனென்றால் அவன் தன்னுடைய பணத்தையும் தன்னுடைய இரட்சகரையும் ஒப்பிடும்போது அவன் தன் பணத்தை இரட்சகரை விட நேசிக்கிறான். அவன் தேவபக்தியற்ற செல்வந்தன்.

இதில் எந்த பகுதி உங்களுக்கு பொருந்துகிறது?

நீங்கள் தேவபக்தியுள்ள ஏழையா?

நீங்கள் தேவபக்தியுள்ள செல்வந்தனா?

நீங்கள் தேவபக்தியற்ற ஏழையா?

நீங்கள் தேவபக்தியற்ற செல்வந்தனா?

நான் செல்வந்தனா அல்லது ஏழையா? என்று உங்களை நீங்களே வெறுமனே கேட்க வேண்டாம். ‘‘நான் தேவபக்தியுள்ளவனா அல்லது தேவபக்தியற்றவனா?’’ என்று உங்களை நீங்களே கேட்க வேண்டுமென விரும்புகிறேன்.

## *நீங்கள் செல்வந்தரா அல்லது ஏழையா என்பது ஒரு பொருட்டல்ல, நீங்கள் தேவபக்தியுள்ளவரா, தேவபக்தியற்றவரா என்பதே முக்கியமானது.*

ஆகவே நீங்கள் ஏழையாயிருந்தால், தேவனுடைய கிருபையால் இயேசுவைப்போல ஏழையாயிருப்பதையே நாம் விரும்புகிறோம்.

நீங்கள் செல்வந்தரானால், தேவனுடைய கிருபையால் இயேசுவைப்போல செல்வந்தராய் இருப்பதையே நாம் விரும்புகிறோம்.

ஏழையா, செல்வந்தரா என்ற கருத்தானது குறைவாகவும் தேவபக்தியுள்ளவனா தேவபக்தியற்றவனா என்ற கருத்தே அதிகமாகவும் இருத்தல் வேண்டும். *அது எப்போதும் இயேசுவைக் குறித்ததாயிருக்க வேண்டும்.*

புதிய ஏற்பாட்டு விசுவாசியாகிய நான் என்னுடைய வாழ்க்கையை எப்படி வாழவேண்டும்?

தேவன் நம்முடைய தேவைகளை குறித்து கரிசனையுள்ளவராக இருக்கிறார். நீங்கள் இந்த மனித அனுபவங்களுக்கூடாக கடந்து செல்கிறதான பரலோக பிரஜைகள். ஆகவே, நீங்கள் உங்கள் சரீர இவ்வுலக வாழ்க்கையை எப்படி வாழ்கிறீர்களென்பது உங்களுக்கான பரலோக பிரதிபலனை நிர்ணயிக்கிறது.

> *‘‘இம்மைக்காக மாத்திரம் நாம் கிறிஸ்துவின்மேல் நம்பிக்கையுள்ளவர்களாயிருந்தால், எல்லா மனுஷரைப்பார்க்கிலும் பரிதபிக்கப்படத்தக்கவர்களாயிருப்போம்.’’* 1 கொரிந்தியர் 15:19

ஆகவே நீங்கள் வாழ்வதான ஒரே வாழ்க்கை மாத்திரமே என்று நினைத்து வாழ்வீர்களானால், உலகிலுள்ள எல்லா மனிதர்களையும்விட நீங்கள் பரிதபிக்கப்படத்தக்கவர்களாய் இருப்பீர்கள்.

மத்தேயு 5:3-12, இயேசுவின் மலைப்பிரசங்கத்திலே, உங்கள் பிரதிபலனானது இங்கே இல்லை பரலோகத்தில் உண்டு என்று தெளிவாகச் சொல்கிறார்.

> *''என்னிமித்தம் உங்களை நிந்தித்து துன்பப்படுத்தி, பலவித தீமையான மொழிகளையும் உங்கள்பேரில் பொய்யாய்ச் சொல்வார்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள். சந்தோஷப்பட்டு களிகூருங்கள். பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும். உங்களுக்கு முன்னிருந்த தீர்க்கதரிசிகளையும் அப்படியே துன்பப்படுத்தினார்களே. ''* மத்தேயு 5:11-12

உங்கள் பிரதிபலனானது இங்கே அல்ல - பரலோகத்தில் உண்டு! ஆனால் நாம் பிரபல்யமான போட்டியில் இருப்பதைப்போன்று காரியங்களை செய்ய முயற்சிக்கிறோம்.

> *''மனுஷகுமாரன் நிமித்தமாக ஜனங்கள் உங்களைப் பகைத்து, உங்களைப் புறம்பாக்கி, உங்களை நிந்தித்து, உங்கள் நாமத்தைப் பொல்லாததென்று தள்ளிவிடும்போது நீங்கள் பாக்கியவான்களாயிருப்பீர்கள். அந்நாளிலே நீங்கள் சந்தோஷப்பட்டுக் களிகூருங்கள். <u>பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்.</u> அவர்களுடைய பிதாக்கள் தீர்க்கதரிசிகளுக்கும் அப்படியே செய்தார்கள்.''* லூக்கா 6:22-23

> *''சரீர முயற்சி அற்ப பிரயோஜனமுள்ளது: தேவபக்தியானது இந்த ஜீவனுக்கும் இதற்குப் பின்வரும் ஜீவனுக்கும் வாக்குத்தத்தமுள்ளதாகையால் எல்லாவற்றிலும் பிரயோஜனமுள்ளது.''* 1 தீமோத்தேயு 4:8

தேவபக்தியுள்ள வாழ்க்கை, இம்மைக்கு மாத்திரமல்ல, வரப்போகிறதான உங்கள் வாழ்க்கைக்கு நன்மை பயக்கிறது என்று வேதாகமம் மிகவும் தெளிவாகச் சொல்கிறது.

1 தீமோத்தேயு 6:6-12ஐ வாசிப்பதற்கு நேரம் எடுத்துக்கொள்ளுங்கள்.

> *''போதுமென்கிற மனதுடனே கூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம். உலகத்திலே நாம் ஒன்றும் கொண்டுவந்ததுமில்லை, இதிலிருந்து நாம் ஒன்றும்*

*கொண்டுபோவதுமில்லை என்பது நிச்சயம். உண்ணவும் உடுக்கவும் நமக்கு உண்டாயிருந்தால் அது போதுமென்றிருக்கக்கடவோம். ஐசுவரியவான்களாக விரும்புகிறவர்கள் சோதனையிலும். கண்ணியிலும் மனுஷரைக் கேட்டிலும் அழிவிலும் அமிழ்த்துகிற மதிகேடும் சேதமுமான பலவித இச்சைகளிலும் விழுகிறார்கள். பணஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது. சிலர் அதை இச்சித்து, விசுவாசத்தை விட்டு வழுவி அநேக வேதனைகளாலே தங்களை உருவக் குத்திக்கொண்டிருக்கிறார்கள். நீயோ தேவனுடைய மனுஷனே இவைகளை விட்டோடி, நீதியையும் தேவபக்தியையும் விசுவாசத்தையும் அன்பையும் பொறுமையையும் சாந்தகுணத்தையும் அடையும்படி நாடு. விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடு, நித்தியஜீவனைப் பற்றிக்கொள் அதற்காகவே நீ அழைக்கப்பட்டாய். அநேக சாட்சிகளுக்கு முன்பாக நல்ல அறிக்கை பண்ணினவனுமாய் இருக்கிறேன்."* 1 தீமோத்தேயு 6:6-12

ஆகவே, எம்முடைய அவதானமானது நித்திய வாழ்க்கையை நோக்கியதாக, நீதியையும், தேவபக்தியையும், பொறுமையையும், அமைதியையும் உடையதாயிருக்க வேண்டும். நாம் இவ்வுலகிற்கு ஒன்றும் கொண்டு வந்ததுமில்லை; ஒன்றையும் எம்மோடு கூட கொண்டுபோகப் போவதுமில்லை.

ஆகவே, புதிய ஏற்பாட்டு விசுவாசியாக, நான் என் ஆவிக்குரிய கண்களை நித்தியத்தை நோக்கியவண்ணமாக, அதேபோன்று ஆசீர்வாதங்களை வரப்போகிறதான வாழ்க்கைக்கான பிரதிபலனாக சேர்த்து வைத்தப்படி வாழவேண்டும்.

புதிய ஏற்பாட்டின்படி, தேவனால் பரலோகில் எமது கைம்மாறை பெறப்போகிறோமென எம்மை நாமே உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

இதோ அவற்றுள் சில:

1. நாம் தாழ்மையாய் இருந்தால் (மத்தேயு 5:3, லூக்கா 1:48)
2. நாம் ஏழைகளாயிருந்தால், பசியுள்ளவர்களாயிருந்தால், துயரப்படுகிறவர்களாய் இருந்தால் (லூக்கா 6:20-21)
3. நாம் கிறிஸ்துவினிமித்தம் வெறுக்கப்பட்டால் (லூக்கா 6:22-23)
4. நாம் நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்களாயிருந்தால் (மத்தேயு 5:5-9)
5. நாம் நீதியினிமித்தம் துன்பப்பட்டால் (மத்தேயு 5:10-12)

6. நாம் கிறிஸ்துவிலும் அவருடைய வழிகளிலும் இடறலடையாதிருந்தால் (லூக்கா 7:23, மத்தேயு 11:6)
7. நாம் வேதாகமத்தில் இருக்கிறதான வெளிப்பாடுகளை வாசித்து, புரிந்துகொண்டு, கீழ்ப்படிவோமானால் (லூக்கா 10:23, 11:27-28, வெளிப்படுத்தல் 1:3)
8. நாம் நமக்கு திரும்பி கொடுக்காதவர்களுக்கு கொடுக்கும்போது (லூக்கா 14:12-14)
9. நம்முடைய விசுவாசம் தேவனுடைய காணக்கூடாத வெளிப்படுத்தல்களை சார்ந்திருக்கும்போது (யோவான் 20:29, 1 பேதுரு 1:7-8)
10. நாம் நம்முடைய நல்ல கிரியைகளைவிட தேவனுடைய மன்னிப்பில் சார்ந்திருப்போமானால்(ரோமர் 4:7-8)
11. நாம் தேவனுக்குள் மரிப்போமானால் (வெளிப்படுத்தல் 14:13, 19:9)
12. நாம் தேவனுடைய வருகைக்காக ஆயத்தப்பட்டு இருப்போமானால் (லூக்கா 12:37, 38,43)

என்னிடத்தில் ஒரு வீடு இருக்குமானால், ஒரு கார் இருக்குமானால் அல்லது செல்வங்கள் இருக்குமானால் அவையெல்லாம் ஒரு பொருட்டல்ல, அளவிடமுடியாத தேவனுடைய ஆசீர்வாதங்களால் நான் ஆசீர்வதிக்கப் பட்டிருக்கிறேன். என்னுடைய பிரதிபலனும் மற்றைய பக்கத்தில் எனக்காக காத்துக்கொண்டிருக்கிறது.

கிறிஸ்துவுக்குள் என்ன ஆசீர்வாதங்கள் இருக்கிறது?

1. நாம் தேவனால் தத்தெடுக்கப்பட்டிருக்கிறோம்.
   *‘‘தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படியே நம்மை இயேசுகிறிஸ்து மூலமாய்த் தமக்குச் <u>சுவிகாரப்புத்திரராகும்படி</u> முன்குறித்திருக்கிறார்.’’* எபேசியர் 1:6

   *‘‘காலம் நிறைவேறினபோது, ஸ்திரீயினிடத்திற் பிறந்தவரும் நியாயப்பிரமாணத்திற்குக் கீழானவருமாகிய தம்முடைய குமாரனை தேவன் அனுப்பினார்.’’* கலாத்தியர் 4:5

2. நாம் தேவனுடைய பிள்ளைகளாகினோம்
   *‘‘அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார்.’’* யோவான் 1:12

3. நாம் பரலோக பிரஜாவுரிமையை பெற்றிருக்கிறோம்
*‘‘கர்த்தர் எல்லாத் தீமையினின்றும் என்னை இரட்சித்து, தம்முடைய பரம ராஜ்யத்தை அடையும்படி காப்பாற்றுவார். அவருக்குச் சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக ஆமென்.’’ 2 தீமோத்தேயு 4:18*

4. நாம் அவருடைய சுதந்தரமாக்கப்பெற்றோம்
*‘‘தமது சித்தத்தின் ஆலோசனைக்குத் தக்கதாக எல்லாவற்றையும் நடப்பிக்கிற அவருடைய தீர்மானத்தின்படியே, நாங்கள் முன்குறிக்கப்பட்டு, கிறிஸ்துவுக்குள் அவருடைய சுதந்தரமாகும்படி தெரிந்துகொள்ளப்பட்டோம்.’’* எபேசியர் 1:12

5. நாம் தேவனுடைய சந்ததியார், கிறிஸ்துவின் உடன் சுதந்திரமானவர்கள்
*‘‘நாம் பிள்ளைகளானால் சுதந்தரருமாமே: தேவனுடைய சுதந்தரரும், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாமே: கிறிஸ்துவுடனேகூட நாம் மகிமைப்படும்படிக்கு அவருடனேகூடப் பாடுபட்டால் அப்படியாகும்.’’* ரோமர் 8:17

*‘‘நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால், ஆபிரகாமின் சந்ததியாராயும், வாக்குத்தத்தத்தின்படியே சுதந்தரராயுமிருக்கிறீர்கள்’’* கலாத்தியர் 3:29

6. நாம் புதுசிருஷ்டியாக்கப்படுகிறோம்
*‘‘இப்படியிருக்க ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான்: பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின’’* 2 கொரிந்தியர் 5:17

*‘‘கிறிஸ்து இயேசுவுக்குள் விருத்தசேதனமும் ஒன்றுமில்லை, விருத்தசேதமில்லாமையும் ஒன்றுமில்லை: புது சிருஷ்டியே காரியம்.’’* கலாத்தியர் 6:15

7. நாம் நீதியைப் பெற்றிருக்கிறோம்
*‘‘அந்தப்படி, கிரியைகளில்லாமல் தேவனாலே நீதிமானென்றெண்ணப்படுகிற மனுஷனுடைய பாக்கியத்தைக் காண்பிக்கும் பொருட்டு,’’* ரோமர் 4:6

8. நாம் தேவனுடன் ஒப்புரவாக்கப்பட்டோம்
*‘‘நாம் தேவனுக்குச் சத்துருக்களாயிருக்கையில், அவருடைய குமாரனின் மரணத்தினாலே அவருடனே ஒப்புரவாக்கப்பட்டோமானால், ஒப்புரவாக்கபட்டபின் நாம்*

*அவருடைய ஜீவனாலே இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே.''* ரோமர் 5:10

*''அதென்னவெனில், தேவன் உலகத்தாருடைய பாவங்களை எண்ணாமல், கிறிஸ்துவுக்குள் அவர்களைத் தமக்கு ஒப்புரவாக்கி, ஒப்புரவாக்குதலின் உபதேசத்தை எங்களிடத்தில் ஒப்புவித்தார்.''* 2 கொரிந்தியர் 5:19

9. நாம் கழுவப்பட்டவர்கள்
*''உங்களில் சிலர் இப்படிப்பட்டவர்களாயிருந்தீர்கள். ஆயினும் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலும், நமது தேவனுடைய ஆவியினாலும் கழுவப்பட்டீர்கள், பரிசுத்தமாக்கப்பட்டீர்கள், நீதிமான்களாக்கப் பட்டீர்கள்.''* 1 கொரிந்தியர் 6:11

10. நாம் பிரியமானவருக்குள் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறோம்
*''பிரியமானவருக்குள் தாம் நமக்குத் தந்தருளின தம்முடைய கிருபையின் மகிமைக்குப் புகழ்ச்சியாக,''* எபேசியர் 1:5

11. நாம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளோம் (இரட்சிப்படைந்துள்ளோம்)
*''பிதாவாகிய தேவனுடைய முன்னறிவின்படியே, ஆவியானவரின் பரிசுத்தமாக்குதலினாலே, கீழ்ப்படிதலுக்கும் இயேசுகிறிஸ்துவினுடைய இரத்தந் தெளிக்கப்படுதலுக்கும் தெரிந்துகொள்ளப்பட்ட பரதேசிகளுக்கு எழுதுகிறதாவது: கிருபையும் சமாதானமும் உங்களுக்குப் பெருகக்கடவது.''* 1 பேதுரு 1:2

12. நாம் கிறிஸ்துவின் சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டோம்
*''நாம் யூதராயினும், கிரேக்கராயினும், அடிமைகளாயினும், சுயாதீனராயினும், எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம்பண்ணப்பட்டு, எல்லாரும் ஒரே ஆவிக்குள்ளாகவே தாகந்தீர்க்கப்பட்டோம்.''* 1 கொரிந்தியர் 12:13

13. தேவனுடைய கிருபையை பெற்றுக்கொண்டோம்
*''<u>கிருபையினாலே</u> விசுவாசத்தைக் கொண்டு <u>இரட்சிக்கப்பட்டீர்கள்:</u> இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு. அந்தப்படியே நாம் <u>இருதிறத்தாரும்</u> ஒரே ஆவியினாலே பிதாவினிடத்தில் சேரும் சிலாக்கியத்தை அவர் மூலமாய் <u>பெற்றிருக்கிறோம்.</u>''* எபேசியர் 2:8,18

14. கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டோம்
*''ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக, ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ அத்தனைபேரும் <u>கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்களே.</u>''* கலாத்தியர் 3:27

15. நமக்கு நித்தியமான வாழ்க்கை உண்டு
*‘‘நான் அவைகளுக்கு நித்தியஜீவனைக் கொடுக்கிறேன். அவைகள் ஒருக்காலும் கெட்டுப்போவதில்லை, ஒருவனும் அவைகளை என் கையிலிருந்து பறித்துக்கொள்வதுமில்லை.’’* யோவான் 10:28

நம்மிடத்தில் தேவனுடைய சமாதானம் உண்டு
*‘‘சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன், <u>என்னுடைய சமாதானத்தையே உங்களுக்கு கொடுக்கிறேன்.</u> உலகம் கொடுக்கிறபிரகாரம் நான் உங்களுக்கு கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலுமிருப்பதாக.’’* யோவான் 14:27

16. நாம் தேவனுடைய சிநேகிதராகிறோம்
*‘‘இனி நான் உங்களை ஊழியக்காரரென்று சொல்லுகிறதில்லை. ஊழியக்காரன் தன் எஜமான் செய்கிறதை அறியமாட்டான். நான் <u>உங்களைச் சிநேகிதர் என்றேன்,</u> ஏனெனில் என் பிதாவினிடத்தில் நான் கேள்விப்பட்ட எல்லாவற்றையும் உங்களுக்கு அறிவித்தேன்.’’* யோவான் 15:15

17. நம்முடைய பெயர்கள் பரலோகத்தில் எழுதப்பட்டிருக்கிறது
*ஆகிலும் ஆவிகள் உங்களுக்குக் கீழ்ப்படிகிறதற்காக நீங்கள் சந்தோஷப்படாமல், <u>உங்கள் நாமங்கள் பரலோகில் எழுதியிருக்கிறதற்காகச்</u> சந்தோஷப்படுங்கள் என்றார்.’’* லூக்கா 10:20

18. ஆட்டுக்குட்டியானவரின் ஜீவபுஸ்தகத்தில் பெயர் எழுதப்பட்டிருப்போம்
*தீட்டுள்ளதும் அருவருப்பையும் பொய்யையும் நடப்பிக்கிறதுமாகிய ஒன்றும் அதில் பிரவேசிப்பதில்லை. <u>ஆட்டுக்குட்டியானவரின் ஜீவபுஸ்தகத்தில் எழுதப்பட்டவர்கள்</u> மாத்திரம் அதில் பிரவேசிப்பார்கள்.’’* வெளிப்படுத்தல் 21:27

19. நாம் பரலோகில் இடம்பெற்றிருப்போம்
*‘‘கிறிஸ்து இயேசுவுக்குள் அவர் நம்மிடத்தில் வைத்த தயவினாலே, தம்முடைய கிருபையின் மகா மேன்மையான ஐசுவரியத்தை வருங்காலங்களில் விளங்கச்செய்வதற்காக.’’* எபேசியர் 2:6

20. நாம் திரித்துவத்தோடு ஐக்கியம் கொண்டிருக்கிறோம்
*‘‘நீங்களும் எங்களோடே ஐக்கியமுள்ளவர்களாகும்படி, நாங்கள் கண்டும் கேட்டும் இருக்கிறதை உங்களுக்கும் அறிவிக்கிறோம். எங்களுடைய ஐக்கியம் பிதாவோடும் அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவோடும் இருக்கிறது.’’ 1 யோவன் 1:3*

21. பரலோகில் நமக்கு ஒரு மாளிகை உண்டு
*''என் பிதாவின் வீட்டில் <u>அநேக வாசஸ்தலங்கள்</u> உண்டு. அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன். ஒரு ஸ்தல்ததை உங்களுக்காக ஆயத்தம்பண்ணப் போகிறேன்.''* யோவான் 14:2

22. நாம் ஆவிக்குரிய ரீதியில் மறுபடியும் பிறந்திருக்கிறோம்
*''இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார். அதற்கு நிக்கொதேமு: ஒரு மனுஷன் முதிர்வயதாயிருக்கையில் எப்படிப் பிறப்பான்? அவன் தன் தாயின் கர்ப்பத்தில் இரண்டாந்தரம் பிரவேசித்து பிறக்கக்கூடுமோ என்றான். இயேசு பிரதியுத்தரமாக: ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன். மாம்சத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும். ஆவியினால பிறப்பது ஆவியாயிருக்கும்.''* யோவான் 3:3-6

23. நாம் அபிஷேகத்தை பெற்றிருக்கிறோம்
*''<u>நீங்கள் அவராலே பெற்ற அபிஷேகம் உங்களில் நிலைத்திருக்கிறது,</u> ஒருவம் உங்களுக்குப் போதிக்கவேண்டுவதில்லை. அந்த அபிஷேகம் சகலத்தையுங்குறித்து உங்களுக்குப் போதிக்கிறது: அது சத்தியமாயிருக்கிறது, பொய்யல்ல, அது உங்களுக்குப் போதித்தபடியே அவரில் நிலைத்திருப்பீர்களாக.''* 1 யோவான் 2:27

24. பரிசுத்த ஆவியானவர் இப்போதும், எப்போதும் நம்மோடு வாழ்கிறார்
*''நான் பிதாவை வேண்டிக்கொள்வேன், அப்பொழுது <u>என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்குச்</u> சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார்.''* யோவான் 14:16

25. மீட்கப்படும் நாளுக்கென்று நாம் பரிசுத்த ஆவியானவரால் முத்திரையிடப்பட்டிருக்கிறோம்.
*''அன்றியும், நீங்கள் மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையாகப் பெற்ற தேவனுடைய பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள்.''* எபேசியர் 4:30

26. நாம் மன்னிப்பை என்றென்றைக்கும் பெற்றிருக்கிறோம்.
*''அவளை நோக்கி: உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டது என்றார்.''* லூக்கா 7:48

*''பிள்ளைகளே, அவருடைய நாமத்தினிமித்தம் உங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட்டிருக்கிறதினால் உங்களுக்கு எழுதுகிறேன்.''* 1 யோவான் 2:12

27. நம்முடைய சரீரங்கள் பரிசுத்த ஆவியானவரின் ஆலயமாகிறது
*''உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா?''* 1 கொரிந்தியர் 6:19

28. நாம் தேவனால் நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறோம்
*''இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறபடியால், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம்.''* ரோமர் 5:1

29. நமக்காக கிறிஸ்து பரிந்துபேசுகிறவராயிருக்கிறார்
*''என் பிள்ளைகளே, நீங்கள் பாவஞ்செய்யாதபடிக்கு இவைகளை உங்களுக்கு எழுதுகிறேன்: ஒருவன் பாவஞ்செய்வானானால் நீதிபரராயிருக்கிற இயேசுகிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார்.''* 1 யோவான் 2:1

30. நாம் கிறிஸ்துவின் ஸ்தானாதிபதிகளாகிறோம்
*''ஆனபடியினாலே, தேவனானவர் எங்களைக்கொண்டு புத்திசொல்லுகிறதுபோல, நாங்கள் கிறிஸ்துவுக்காக ஸ்தானாதிபதிகளாயிருந்து, தேவனோடே ஒப்புரவாகுங்கள் என்று, கிறிஸ்துவினிமித்தம் உங்களை வேண்டிக்கொள்ளுகிறோம்.''* 2 கொரிந்தியர் 5:20

31. நாம் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களால் ஆசீர்வதிக்கப்படுகிறோம்
*''நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம்: அவர் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதிக்கிறார்.''* எபேசியர் 1:3

32. அடிப்படையான காரியங்களை நிறைவேற்றுவதற்கு உள்ளான பெலன் கொடுக்கப்படுகிறது
*''என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ் செயய எனக்குப் பெலனுண்டு.''* பிலிப்பியர் 4:13

33. எமது உண்மையில்லாத் தன்மைக்கு அவர் உண்மைத்துவமாயிருக்கிறார்
*''நாம் உண்மையில்லாதவர்களாயிருந்தாலும், அவர் உண்மையுள்ளவராயிருக்கிறார். அவர் தம்மைத் தாமே மறுதலிக்கமாட்டார்.''* 2 தீமோத்தேயு 2:13

34. சோதனையை எதிர்த்து போராட முடியுமென வாக்குத்தத்தம் கொடுக்கப்படல்
*''மனுஷருக்கு நேரிடுகிற சோதனையேயல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை. தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார். உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடாமல், சோதனையைத் தாங்கத்தக்கதாக, சோதனையோடு கூட அதற்குத் தப்பிக்கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார்.''* 1 கொரிந்தியர் 10:13

35. நாம் ராஜாக்களாகவும் ஆசாரியர்களாகவும் அழைக்கப்பட்டிருக்கிறோம்.
*''நம்மிடத்தில் அன்புகூர்ந்து தமது இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களற நம்மைக் கழுவி, தம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாக நம்மை ராஜாக்களும், ஆசாரியர்களுமாக்கின அவருக்கு மகிமையும் வல்லமையும் என்றென்றைக்கும் உண்டாயிருப்பதாக. ஆமென்.''* வெளிப்படுத்தல் 1:6

36. நாம் தெளிந்த புத்தியின் வல்லமையை பெற்றுக்கொள்கிறோம்
*''தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும் அன்பும் தெளிந்த புத்தியுள்ளமுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார்.''* 2 தீமோத்தேயு 1:7

37. நாம் பயத்தின் ஆவியைப் பெறவில்லை
*''தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும் அன்பும் தெளிந்த புத்தியுள்ளமுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார்.''* 2 தீமோத்தேயு 1:7

38. நாம் கர்த்தரோடு இசைந்திருக்கிறோம்
*''அப்படியே கர்த்தரோடிசைந்திருக்கிறவனும், அவருடனே ஒரே ஆவியாயிருக்கிறான்''* 2 தீமோத்தேயு 1:7

39. நாம் கிரயம் செலுத்தி மீட்கப்பட்டோம். இனி என்னுடைய வாழ்வு எனக்குரியதல்ல
*''உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்கல்லவென்றும் அறியீர்களா?''* 1 கொரிந்தியர் 6:19

40. நான் இப்போது இயேசு கிறிஸ்துவின் சரீரத்தில் அங்கமாய் இருக்கிறேன்
*''நீங்களே கிறிஸ்துவின் சரீரமாயும், தனித்தனியே அவயவங்களாயுமிருக்கிறீர்கள்* 1 கொரிந்தியர் 12:27

41. நான் கிறிஸ்துவுக்குள் பரிபூரணமாய் இருக்கிறேன்.
*''மேலும் சகல துரைத்தனங்களுக்கும் அதிகாரத்ததுக்கும் தலைவராயிருக்கிற அவருக்குள் நீங்கள் பரிபூரணமுள்ளவர்களாயிருக்கிறீர்கள்.''* கொலோசேயர் 2:10

42. நான் தேவனுடைய ஆலயமாயிருக்கிறேன். அவர் எனக்குள் வாசமாயிருக்கிறார்
*''நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக் கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா?''* 1 கொரிந்தியர் 3:16

43. நான் தேவனுடைய வேலையாள்
*''நாங்கள் தேவனுக்கு உடன்வேலையாட்களாயிருக்கிறோம். நீங்கள் தேவனுடைய பண்ணையும் தேவனுடைய மாளிகையுமாயிருக்கிறீர்கள்''* 1 கொரிந்தியர் 3:9

44. நான் மெய்யான திராட்சைசெடியின் கிளை
*''நான் மெய்யான திராட்சைச்செடி, என் பிதா திராட்சைத் தோட்டக்காரர்''* யோவான் 15:1

45. நான் ராஜரீக ஆசாரியக்கூட்டத்தில் ஒரு பகுதியாகும்
*''நீங்களோ, உங்களை அந்தகரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும் பரிசுத்த ஜாதியாயும் அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்''* 1 பேதுரு 2:9

46. நான் தேவனுடைய செய்கையாயிருக்கிறேன்
*''ஏனெனில், நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம். அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம்பண்ணியிருக்கிறார்''* எபேசியர் 2:10

*நீங்கள் தேவனுடைய செய்கையாயிருக்கிறீர்கள்!*

*நாம் பேசக்கூடிய மிகப்பெரிய ஆசீர்வாதங்கள் சில வேதாகமத்திலிருந்தபோதிலும் நான் சிலவற்றை பட்டியல்படுத்துகிறேன்.*

*படைப்பில் தேவனுடைய உண்மையான வடிவமைப்பானது மனிதன் உட்பட, செழிப்பையும், சமாதானத்தையும், பூரணத்துவத்தையும் அனுபவிப்பதே ஆகும். ஆனால் அந்த வடிவமைப்பானது பூமிக்குள் பாவம் உட்புகுந்த போது அழிந்துபோனது.*

*ஆசீர்வாதத்தின் அறிக்கைகளாவன தேவனுடைய விருப்பமானது அவருடைய விருப்பங்களை மற்றவரோடு பகிர்ந்து கொள்வது அல்லது அவருடைய நன்மைக்கேதுவான காரியங்களை உரிமை அடிப்படையில் பெற்றுக்கொள்வதாகும். தேவன் கொடுக்கும் முழுமையான ஆசீர்வாதமானது இயேசு கிறிஸ்து மூலமாய் விசுவாசத்தைக்கொண்டு வருகிறதான புதிய வாழ்க்கை ஆகும்.*

*எமது அன்றாட வாழ்வில் நாம் அனுபவிக்கும் ஆசீர்வாதங்களுக்கான காரியங்களானது தற்காலிகமானது, ஆனால் கிறிஸ்துவுக்குள் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களானது நித்தியமானவைகள்.*

> *சங்கீதக்காரன் சொல்கிறார் : ‘‘யாக்கோபின் தேவனைத் தன் துணையாகக் கொண்டிருந்து, தன் தேவனாகிய கர்த்தர்மேல் நம்பிக்கையை வைக்கிறவன் பாக்கியவான்’’* சங்கீதம் 146:5